SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 30. TML1169 - கவிஞர் மரியதெரசாவின் கவிதைகளில் பெண் நிலைப்பாடு

முனைவர் தி ஹேமலதா
உதவிப் பேராசிரியர் – தலைவர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (துன்னாட்சி),
ஈரோடு–12.

## முன்னுரை

18–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகம் வியக்கத்தக்க அளவுக்கு பல துறைகளில் முன்னேற்றம் கண்டது அறிவியல் யுகம் என்று கூறப்பட்ட அவ்வேளையில் அனைத்து துறைகளைப் பற்றிய ஐயங்கள் கேள்விகள் எழுந்தன அதன் விளைவாக புதியன கண்டறியும் தேடல் உணர்வு புரிந்து கொள்ள வேண்டும் என்ற முனைப்பின் தாகம் எதனையும் அழகாக ஆழமாக அறிய வேண்டும் என்ற ஆவல் பிறந்தது அப்போதுதான் அனைத்து பரிமாணங்களிலும் பெண் என்பவள் பாதுகாக்கப்பட வேண்டியவளாகவும் ஆணுக்குத் துணை நிற்பவளாகவும் கருதப்பட்டு அதுவே சமூகத்தில் பழகிப்போய் இருப்பதும் கேள்விக்கு உட்படுத்தப் பட்டது. இவற்றிற்கு தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்ட புரட்சியே பெண்ணியம் என்பதாகும்.

## பெண்ணியம் – வரையறை

பெண்ணியம் என்பதற்கான வரையறை வெவ்வேறு நாட்டு கலாச்சாரம் வரலாற்று பின்னணி அவ்வள் நாட்டு சமுதாயத்தில் பெண்களிடம் பெற்றுள்ள இடம் கல்வி இன வர்க்க வேறுபாடுகள் ஆகிய பலவற்றின் அடிப்படையில் மாற்று கருத்துக்களைக் கொண்டதாக உள்ளது இதன் அடிப்படையில் பெண்ணியம் என்பது கீழ்க்கண்ட முறைகளில் வரையறுக்கப்படுகிறது.

1. சமூகத்திலும் வேலை தளங்களிலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்கு முறை மற்றும் சுரண்டல் பற்றி பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்கு பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளுமே பெண்ணியம். (சு.சண்முகசுந்தரம்,தொகுப்பு,பெண்ணியம் ப.10)

2. உலகெங்கும் பெண்களுக்கு என்று ஆண்களால் வகுக்கப்பட்டிருக்கும் நீதியையும் நெறியையும் பெண் என்ற நிலையில் நின்று மறுபரிசீலனை செய்வதே ஆராய்வதே பெண்ணியம் (கதிர் மகாதேவன்,இரா.மோகன், பதிப்பு பெண்ணியம், ப.66)

இவ்வாறு பெண்ணியம் என்பதற்குப் பல வரையறைகள் இருப்பினும் பெண் விடுதலை என்ற கருத்தை வலியுறுத்துவதே பெண்ணியத்தின் நோக்கமாக உள்ளது.

## இக்கால இலக்கியத்தில் பெண்ணியம்

இக்காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் பெண்மையின் சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகின பெண்களின் பிறப்பு கல்வி வரதட்சணை திருமணம் குழந்தை மனம் பொருந்தாமணம் பலதாரமணம் இல்வாழ்க்கை காட்டும் விதவை நிலை சொத்துரிமை கட்டுப்பாடு சமநீதி முதலியன குறித்து புதிய மதிப்பீட்டு மாற்றங்களுடன் கவிதைகளும் புதினங்களும் எழுந்தன.

இன்று பெண்கள் பல துறைகளிலும் தங்களின் ஆளுமையை நிலைநாட்டி வருகின்றனர் எழுத்துரிமை பேச்சுரிமை நடைமுறையில் உள்ள அனைத்து உரிமைகளிலும் பெண்கள் கால் தடங்கல் பதித்து வருகின்றனர். அரசியல், வணிகம், மருத்துவம், நிதி நிர்வாகம், அறிவியல், கலை, இலக்கியம், கல்வி, காவல் முதலான சமுதாய பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

## பெண் பெற்றிருக்கும் பொறுப்பு

ஆண் பெண் பிறப்பில் இயற்கையான ஆணைவிட பெண்ணுக்கே பொறுப்பையும் மதிப்பையும் கூட்டிக் கொடுத்திருக்கிறது கருவாக மக்களை 10 மாதம் சுமப்பவள். மானுட வேதனைகளிலேயே மிகப்பெரிய வேதனையான பிரசவ வேதனையை குழந்தை பெரும் தோறும் பெற்று துடிப்பவள்

*கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் அந்த குழந்தையை எடுத்து வளர்ப்பவள் என்ற முறையில் ஒரு தாய் குடும்ப அமைப்பில் பெற்றிருக்கும் பொறுப்பு மிகப்பெரியதாக இயற்கையாகவே அமைந்துள்ளது இது எளியதும் அன்று சிறியதும் அன்று எனவேதான் தாயை தெய்வமாக நாம் மரபு தியானிக்கிறது தெய்வ பட்டியலில் அன்னையே முன்னவலாக எண்ணப்படுகிறாள் 'மாதா பிதா குரு தெய்வம்' 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பன நம்மிடம் வழங்கும் மொழிகள்.*

**தையல் சொல் கேள்**

*தையல் சொல் கேளல் என்பது ஔவை மொழி தையல் சொல் கேள் என்பது இன்றைய புதுமொழி மகளிர் பல்வேறு துறைகளில் தங்கள் முத்திரையை பதித்தார்கள் பதித்து வருகிறார்கள். நாட்டு விடுதலையில் நீதிமன்றத்தில் கதை கவிதை எழுத்தாற்றலில் கண்டுபிடிப்புகளில் என்று அத்தனை துறைகளிலும் பெண்கள் தங்களை மேம்படுத்தி வருகின்றார்கள்.*

**கற்பு என்பது...**

*திருவள்ளுவர் கற்பு எனும் மன உறுதி ஒரு பெண்ணிடத்தில் இருக்குமானால் உலகில் பெண்களை விட சிறந்தவர் இருக்க முடியாது எனும் கருத்தில்*

பெண்ணின் பெருந்தக்கை யாவுல கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்

*என்கிறார். இல்லற வாழ்க்கையில் இருக்க வேண்டிய கற்று எனும் மன உறுதி இருவரிடத்தும் அமைந்து நிலையாக இருக்கப்பெற்றால், அந்த பெண்ணை காட்டிலும் பெருமைக்கு உரிமை உடையவளாக உலகில் வேறு எவை உள்ளன?*

*பெண்ணுக்கு நிகராக ஆணும் ஒருத்தியோடு மட்டுமே வாழ வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்தாக அமைந்துள்ளது இல்வாழ்க்கை அதிகாரத்தில்*

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

*என்றும் திருவள்ளுவர் கூறுவதில் இருந்து ஆணுக்கும் சமமாக வற்புறுத்துகின்றார் என்றே தெரிகின்றது.*

**மரியதரசா கவிதைகளில் பெண்ணியம்**

*பெண்ணுக்கு முதன்மை கொடுக்கும் நாடு நிலத்தையும் நீரையும் அறிவையும் பொருளையும் பெண் தெய்வமாக போற்றும் நாடு நம் நாடு ஒவ்வொரு இனத்திலும் உருவாகும் அறிவாளிக்குப் பின்னால் ஒரு பெண் உந்து சக்தியாக இருக்கிறாள் என்பது உறுதி பிற பல இலக்கிய வடிவங்களில் கவிதை என்பது இக்கால இலக்கியவாதிகளாலும் வாசகர்களாலும் மொழி ஆர்வலர்களாலும் பெரிதும் ஏற்கப்பட்டது அதன் எளிமையும் பொருள் வெளிப்பாடும் அங்கனம் அதை சமுதாயம் ஏற்கச் செய்தது.*

*சமுதாய விழிப்புணர்வு சிந்தனைகளை கொண்டு கவிதை செய்த கவிஞர்கள் பாரதி பாரதிதாசன் கவிமணி நாமக்கல் கவிஞர் என பலர் ஆவர் அவர் வரிசையில் கவிஞர் மரியதரசாவின் கவிதைகள் பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் அமைந்துள்ளன.*

**மனைவி என்பவள்...**

*கணவன் மனைவி பந்தத்தை அழகாக மனதில் பதியும்படி எடுத்துச் சொல்கிறார் கவிஞர் முதுமையின் ஊன்றுகோலாய் இருக்கும் மனைவியின் உன்னதத்தை உணர்த்தும் கவிதை அடிகள் இதோ*

முதுமையின் பிடியல் நீ வலுவற்ற மனிதனாய்
உன் மனைவி உனது சிறந்த ஊன்றுகோலாய்
உன்னால் ஏற்பட்ட
காயங்களை அவள் மறந்திடுவாள்
உன் காயங்களுக்கு
அன்புடன் மறந்திடுவாள்
சேவைகளால் உன்னை மகிழ்விப்பாள்
உன் மனம் சிறுமையில் குன்றிப்போகும் ( நிழல் தேடும் மரங்கள், ப. 40 )

பெண்களுக்கு அறிவூட்டலும் உயர்வு ஆற்றலும்
மழையாய் நிமிர்ந்து நில்
உன்னை அழிக்க அஞ்சுவர்
புயலாய் எழுந்து நில்
உனை நெருங்க நடுங்குவர்

மின்சாரமாய் தாக்கிடு உன்னை
மிதித்திடும் மிரளுவர்
தீயாய் தகர்த்திடு – உனை
தீண்டிடத் தயங்குவார் ( நிழல் தேடும் மரங்கள், ப. 37 )

*எனும் என்று பெண்ணினத்துக்குச் சொல்கின்றார். பெண்கள் தமக்கு பின்னால் தோண்டப்படும் படுகுழியை உணர்ந்து விழிப்புணர்வு அடைய எச்சரிக்கிறார்.*

**பெண் காத்திருத்தல்**

*ஒருவனை நினைத்தால் அவனை மனம் செய்து வாழ்வது வரை அவனுக்காகவே காத்திருக்கிறாள் பெண் ஒருத்தி*

கார் ந்தல் நிறை
வெண்மலர் சூடி
உன் வழி பார்த்து காத்திருந்தேன்
கருங்குந்தல் இடை
வெண்ணரை ஓடியும்
உனக்காகவே வாழ்கிறேன் ( நிழல் தேடும் மரங்கள், ப. 129)

*இளமையில் காத்திருந்தவாறே முதுமையிலும் காத்திருப்பதாக பெண் ஒருத்தி வலி பேசுகிறார் கவிதை படைக்கிறார் கவிஞர்.*

**விதவை**

*விதவையை வாழ வைக்க வேண்டும் என்ற புரட்சி கவிதை போற்றத்தக்கது.*

மலரை கூட மாலை வரை வாழ வைத்தான்
மாலை இழந்தவலை காலம் வரை வாட விட்டான். ( நிழல் தேடும் மரங்கள், ப. 109)

*சிறந்த கவிஞர் மரியதரசா என்பதற்கு கீழ்வரும் அரிய கற்பனை கவிதை ஒரு சான்று.*

குடிநீருக்கு பஞ்சமா
விஞ்ஞானிகளை அழையுங்கள்
பெண்களின் கண்ணீரை தண்ணீரக்குங்கள்
அகிலம் உள்ளவரை
அருந்த நீர் கிடைத்துவிடும். (இரவு தழுவாத பூமி, ப.60)

**பெண் துன்பத்தையும் இன்பமாக்குபவள்**

*துன்பத்தைத் தாங்கி தாங்கி பழகிப்போனவள் பெண் வழி அல்லது துன்பம் பொறுத்து இன்பம் ஆக்குபவள் பெண் என்பதை சொல்லாமல் சொல்லி வைக்கிறது இக்கவிதை*

தேகத்தில் துளையிட்டு தொலைக்கும்
சிறு மூக்குத்தியும் இரு காதணியும்
துன்பத்தை இன்பமாகுபவள்
என்று பறைசாற்றும் (இரவு தழுவாத பூமி, ப.60)

**முடிவுரை**

*கவிஞர் மரியாதை கற்பனை, கருத்துச் செறிவு நிறைந்த கவிதைகளைப் படைத்து உலகை விட்டுள்ளார் பெண்களை உயர்வாக போற்றியுள்ளார் பெண் அடிமை நீக்க பாடியுள்ளார் ஆணின் அதிகார ஆதிக்கத்தால் பெண்கள் அடையும் அண்ணல்களை சித்தரித்துள்ளார் பெண்களுக்கு அறிவூட்டலயும் உயர்வாக்களையும் கவிஞர் என்ற நிலையில் நிறைவாக செய்துள்ளார் பெண் கவிஞராகிய இவரை பெண்ணே எழுச்சி கவிஞர் எனலாம்.*

**துணை நூற்பட்டியல்**

1. கவிஞர் மரியதரசா –இரவு தழுவாத பூமி,
2. கவிஞர் மரியதரசா நிழல் தேடும் மரங்கள்
3. திருக்குறள் – கழக வெளியீடு
4. சு.சண்முகசுந்தரம்,தொகுப்பு, பெண்ணியமும் கலை. இலக்கியப் பிரதிகளும்‘, காவ்யா ...